**Coimbatore**
**Title :**
**Author :**
**Location :**
**Article Date : 09/09/2011**

# டாஸ்மாக் இடம் மாற்றுங்க கலெக்டருக்கு கடிதம் குவிகிறது

**கோவை, செப். 9 -**
சாயிபாபாகாலனி, என்.எஸ்.ஆர்., ரோட்டில் வெங்கிட்டாபுரம், பஸ் ஸ்டாப் அருகில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்றும் வரை, கலெக்டருக்கு கடிதம் அனுப்பும் போராட்டத்தை மக்கள் சக்தி கட்சி துவக்கியுள்ளது.

மக்கள் சக்தி கட்சி சார்பில், பள்ளி மாணவர்களிடம் கையெழுத்து வாங்கப்பட்டு, கடிதங்கள் போஸ்ட் செய்யப்பட்டன. ஒரு கார்டில் 5 பேர் வீதம், 200 மாணவர்கள் கையெழுத்திட்டனர். நடவடிக்கை எடுக்கும் வரை கடிதம் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் சக்தி கட்சியை சார்ந்த துரைராஜ் கூறியது: மூன்று பள்ளிகளின் மெயின் பஸ் ஸ்டாப், கோவில், மருத்துவமனை என, மக்கள் கூடும் முக்கிய இடத்தில் டாஸ்மாக் கடை 1613 உள்ளது. இங்கு, பார் வசதி கிடையாது. ரோட்டில் மது அருந்திவிட்டு, பொதுமக்களுக்கு இடையூறு செய்வது அதிகரித்து வருகிறது.

கலெக்டரிடம் கடந்த 43 நாட்களுக்கு முன், வேறு இடத்திற்கு டாஸ்மாக்கை மாற்றக்கோரி மனு அளிக்கப்பட்டது. இதுவரை, டாஸ்மாக் இட மாற்றம் செய்யவில்லை. டாஸ்மாக் கடையை அகற்றும் வரை, தினமும் 200 மாணவர்களிடம் கையெழுத்து பெற்று, கடிதம் அனுப்பும் போராட்டம் தொடரும். தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என, கட்சி சார்பில் ஒரு கோடி கடிதம் அனுப்பும் திட்டம் உள்ளது, என்றார்.